## சென்னை வர்த்தக மையத்தில்

# ஆதிதிராவிடர் - பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதிகலைகோல் பயிற்சிப் பட்டறை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, செப்.20-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சென்னை வர்த்தக மையத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதிகலைகோல் பயிற்சி பட்டறையை 22.09.2025 அன்று தொடங்கி வைக்கிறார்.

சென்னை வர்த்தக மையத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதிகலைகோல் பயிற்சி பட்டறையை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 22.09.2025 அன்று காலை 10.00 மணியளவில் தொடங்கி வைக்கிறார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) சார்பாக தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதிகலைகோல் பயிற்சி பட்டறை சென்னை வர்த்தக மையத்தில் 22, 23 மற்றும் 24 செப்டம்பர் 2025ல் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் முன்னிலை வகுக்கவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் மருத்துவர். மா. மதிவேந்தன் தலைமையும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக தலைவர் நா.இளையராஜா சிறப்புரை ஏற்கவும் உள்ளார்கள்.

இப்பயிற்சி பட்டறையில் பழமையான கலைகளையும் அதன் பரிணாம வளர்ச்சியையும் மாணவர்களுக்கு கற்றுத் தரும் ஒரு நிகழ்வாக வடிவமைக்கப்பட்டு நாட்டுப்புறக் கலை, நாடகக் கலை, இலக்கிய கலை மற்றும் காட்சி கலை ஆகிய கலைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை கொண்டு மூன்று நாட்கள் பயிற்சி பயிலரங்கம் நடைபெறவுள்ளது.

இக்கலைகளின் வழியாக மனித எண்ணங்களின் சிந்தனைகளை இணைக்கும் ஒரு பாலமாகவும், கற்பனையை மேன்மைபடுத்தும் கலைகளை நான்கு பிரிவுகளாக பிரித்து இளைஞர்களுக்கு வழிநடத்தும் நோக்கில் இக்கலைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களான மூத்த பறை இசை கலைஞர் பத்மஸ்ரீ வேலு ஆசான் அவர்கள், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனத் தலைவர் டிராட்ஸ்கி மருது, எழுத்தாளர்கள் இமையம் அவர்கள், திருமதி சுகிர்தராணி அவர்கள், மூத்த நாடக கலைஞர் மற்றும் நடிகர் மு. ராமசாமி அவர்கள் மற்றும் ஓவியர் சந்திரசேகரன் குருசாமி போன்றவர்கள் பங்கேற்கவுள்ளார்கள்.

இவ்விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா வரவேற்புரையும், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி நன்றியுரை ஆற்றவுள்ளார்கள்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல் நலக்குறைவால் மறைந்த திரைக்கலைஞர் ரோபோ சங்கர் அவர்களின் இல்லத்திற்கு நேற்று (19.9.2025) நேரில் சென்று, அவரது திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினர் மற்றும் கலை உலக நண்பர்களுக்கு ஆறுதல் கூறினார்.

## மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்காவில்

# ரூ.12.22 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.20

மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில் உள்ள நாகேஸ்வரராவ் பூங்காவில் ரூ.12.22 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகளை நேற்று (19.09.2025) அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்.

நேற்று (19.09.2025) நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 123க்குட்பட்ட மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில் உள்ள நாகேஸ்வரராவ் பூங்காவில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ், ரூ.12.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மேம்பாட்டுப் பணிகள் தொடர்பான திட்ட வரைபடத்தினைப் பார்வையிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில் அமைந்துள்ள நாகேஸ்வரராவ் பூங்கா 20.10.1949 அன்று அப்போதைய மதராஸ் மாகாணத்தின் பிரதமர் பி.எஸ். குமாரசாமிராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இப்பூங்காவானது அப்பகுதியில் வசித்த சுதந்திரப் போராட்ட வீரரான நாகேஸ்வரராவ் பெயரால் அழைக்கப்படுகிறது. இப்பூங்கா சென்னை நகரின் வரலாற்றுச் சிறப்புமிக்க பசுமை வளம் நிறைந்த பூங்காவாகும்.

இப்பூங்காவின் மொத்த பரப்பளவு சுமார் 4 ஏக்கர் (16,929.17 சதுர மீட்டர்) ஆகும். இதில் சமூக அரங்கு (Community Pavilion), பேட்மிண்டன் மைதானம், வெளிப்புற உடற்பயிற்சி மையம் (Outdoor Gym), அமர்வு இடம், நீர்நிலை (Water body) கட்டமைப்பு, பசுமைப் பரப்பு, பேவர் பிளாக் பதித்த நடைபாதை, குழந்தைகள் விளையாட்டுப் பகுதி, நுழைவு வாயில் ஆகியவற்றை கொண்டுள்ளது. மேலும், லஸ் சர்ச் சாலை (தெற்கு) மற்றும் லஸ் சர்ச் சாலை (வடக்கு) ஆகிய இரண்டு நுழைவாயில்கள் உள்ளன.

இப்பூங்காவில் தற்போது "பசுமைத் தடம் (Green Footprint)" என்ற கருத்தை மையமாகக் கொண்டு மேம்படுத்தி புதுப்பிக்கும் பணிகள் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.12.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் நோக்கம் இப்பூங்காவினை மேலும் பசுமை நிறைந்த மற்றும் நிலைத்தன்மை கொண்ட, அழகிய வடிவமைப்புடன் பாரம்பரிய அழகை பேணும்படியாக மேம்படுத்துதல் ஆகும்.

இந்த மேம்பாட்டுப் பணிகளில் அழகிய வடிவமைப்புடன் கூடிய நுழைவு வளாகம் (Entrance Plaze), கலந்துரையாடும் இடம் (Interactive Space), பூப்பந்து மைதானம் (Badminton Court), குழந்தைகள் விளையாடும் பகுதி (Kids Play Area), குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், நீரூற்றுடன் கூடிய இருக்கைகள் (Fountain with Seatings), மரங்களைச் சுற்றிலும் அமரும் இடம் (Tree Seatings), அழகிய வடிவமைப்புடன் கூடிய அமரும் இடம் (Gazebo), டென்சைல் கூரையுடன் கூடிய அமரும் இடம் (Tensile Seating), நீர்நிலை கட்டமைப்பு (Water Body (Swale)), ரிப்பன் வடிவில் அமரும் இடம் (Ribbon Sitting), பசுமைப் பரப்பு (Green Space), செயற்கை நீரூற்று (Fountain), ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கைப்பிடிகள் அமைத்தல், தண்ணீர்தெளிப்பு (Sprinkler) ஏற்பாடுகள், குடிநீர் மற்றும் மின்வசதி, கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், சுற்றுச்சுவர் அமைத்தல், பெவிலியன் கூரை அமைப்பு, அறிவிப்புப் பலகைகள், ஒலி அமைப்பு (PA System), ஒப்பனை அறை (Toilets) மற்றும் பாதுகாவலர் அறை உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் இப்பகுதியில் உள்ள குழந்தைகள், இளைஞர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் இப்பூங்காவினைப் பயன்படுத்தி பெரிதும் பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மாமன்ற உறுப்பினர் திருமதி மோ.சரஸ்வதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருக்கோயில்கள் சார்பில்

# மயிலாப்பூரில் மாபெரும் கொலுவுடன் நவராத்திரி பெருவிழா!

## 22–ஆம் தேதி தொடங்குகிறது – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, செப்.20

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் மாபெரும் கொலு மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் நவராத்திரி பெருவிழா 22.09.2025 முதல் 01.10.2025 வரை 10 நாட்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை தொன்மை வாய்ந்த திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளோடு, திருக்கோயில்கள் சார்பில் கமலமுனி சித்தர், பாம்பாட்டி சித்தர், சுந்தரானந்த சித்தர், சிவவாக்கிய சித்தர், பதஞ்சலி சித்தர் ஆகிய சித்தர் பெருமக்களுக்கும், திருஅருட்பிரகாச வள்ளலார், தெய்வப் புலவர் சேக்கிழார், சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் (அப்பர் பெருமான்), நாலாயிர திவ்ய பிரபந்த தமிழ் மறை நூலினைத் தொகுத்தவரான ஸ்ரீமத்நாதமுனிகள் மற்றும் அவரது பெயரன் ஆளவந்தார் ஆச்சாரியார், 63 நாயன்மார்களில் நந்தனார், காரைக்கால் அம்மையார் போன்ற அருளாளர்களுக்கும் விழா எடுத்தும் சிறப்பு செய்து வருகிறது.

மேலும், கடந்தாண்டு 9 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி பெருவிழாவும், கடந்த 3 ஆண்டுகளாக சென்னை, மயிலாப்பூரில் நவராத்திரி பெருவிழாவும் பக்தர்கள் பங்கேற்புடன் விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது.

உலகில் தீமைகளை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகின்ற தொடர்நிகழ்வாக கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழாவானது திருக்கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் மாபெரும் கொலுவுடன் 22.09.2025 முதல் 01.10.2025 வரை 10 நாட்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. ஒவ்வொரு நாளும் மாலையில் சிறப்பு வழிபாடும், இசை மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.


நவராத்திரி விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியாக 22.09.2025 அன்று விநாயகர் அகவல் மற்றும் அபிராமி அந்தாதியுடன் தமிழ் இசைச்சுடர் திருமதி சுசித்ரா பாலசுப்பிரமணியம் அவர்களின் பக்தி இசை நிகழ்ச்சியுடன் தொடங்கி, தினந்தோறும் ஒரு வழிபாட்டுடன் இறையருட் செல்வன் எச்.சூரியநாராயணன், சின்னத்திரை புகழ் திருமதி அருணா மற்றும் அன்பு குழுவினரின் பக்தி இசை, கலைமாமணி திருமதி மாலதி, சின்னத்திரை புகழ் முத்துசிற்பி மற்றும் கீர்த்தனாஸ் குழுவினரின் பக்தி இசை, தேசிய விருது பெற்ற டாக்டர் ஆர்.காஷ்யபமகேஷ் குழுவினரின் பக்தி இசை, நாட்டிய சிரோன்மணி திருமதி உமா தினேஷ் - சாய் முத்ரா நடன குழுவினரின பரத நாட்டியம், திருமதி ரிஷிப்ரியா குருபிரசாத் குழுவினரின் பக்தி இசை, கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்களின் ஆன்மிக சொற்பொழிவு, நிருத்ய நாட்டியாலயா மற்றும் ஸ்ரீஞானமுத்ரா அகாடமி குழுவினரின் பரதம், சின்னத்திரை புகழ் திருமதி சியாமளா, செல்வி சஜினி மற்றும் ரிதம் குழுவினரின் பக்தி இசை, கலைமாமணி டாக்டர் வேல்முருகன் மற்றும் சின்னத்திரை புகழ் திருமதி சுமதிஸ்ரீ ஆகியோரின் பக்தி களஞ்சியம், கின்னஸ் புகழ் விநாயகா நாட்டியாலயாவின் பரதம், கலைமாமணி திருமதி கோபிகா வர்மா அவர்களின் மோகினி ஆட்டம், கலைமாமணி வீரமணி ராஜு குழுவினரின் பக்தி இசை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

திருக்கோயில்கள் சார்பில் கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழா நிகழ்ச்சிகளில் தவத்திரு ஆதீனப் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சமய சான்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தூத்துக்குடி கே.வி.கே. சாமி

### செப்டம்பர் 20 (1956)



தி.மு.க. செயற்குழு உறுப்பினராகவும், திருநெல்வேலி மாவட்டக் கழகச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவராகவும் பணியாற்றியவர்.

1947ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற தி.க. மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தின்போது பங்கேற்று சிறை சென்றவர்.

தூத்துக்குடி நகரசபையின் உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

## ஆவடி சா.மு.நாசர் தலைமையில் – எம்.எஸ்.கே.ரமேஸ்ராஜ் முன்னிலையில்

# முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் முதலாம் ஆண்டு நினைவு நாள்!

## 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

சென்னை, செப்.20-

கழக முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் க. சுந்தரம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மீஞ்சூரில் எழில் திருமண மண்டபத்தில் 18.9.2025 அன்று நடைபெற்றது. அவரது திருவுருவப்படத்தை கே.என்.நேரு திறந்து வைத்து 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் அறுவை உணவுகள் வழங்கினார். ஆவடி சா.மு.நாசர் தலைமையில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே . ரமேஷ்ராஜ் முன்னிலையில் பூவை சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ண சாமி துவக்க உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராசன் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகர்மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன் தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜெ.மூர்த்தி பொதுக் குழு உறுப்பினர்கள் பொன்னேரி நகராட்சி தலைவர் டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் மீஞ்சூர் கே.எஸ்.மணி மீ.வீ. கோதண்டம் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மீஞ்சூர் பேரூர் கழக நிர்வாகிகள் கிளை கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.





நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னாள் அமைச்சர் க.சுந்தரம் அவர்களின் மகனும் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு. தமிழ் உதயன் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் உறையாற்றி பொழுது கழகத்தின் பல்வேறு நிலைகளில் பணியாற்றி பொன்னேரி பகுதி மக்களின் நம்பிக்கையை பெற்ற சுந்தரம் அவர்களின் கடும் உழைப்பையும், மக்கள் பணியில் கொண்டிருந்த ஈடுபாட்டையும் எடுத்துக் கூறி உரையாற்றினார். அதைத்தொடர்ந்து க. சுந்தரம் அவர்களின் நினைவாக அப்பகுதி மக்களுக்கு மீஞ்சூர் பேரூர் கழக செயலாளரும் அவரது மகனுமான க.சு.தமிழ்உதயன் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில், கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–126ல்

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## இன்று நடைபெறுகிறது!

சென்னை, செப்.20-

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-126க்குட்பட்ட மந்தைவெளி, ஜெத் நகரில் உள்ள ஸ்ரீமதி நாராயணி அம்மாள் கல்யாண மண்டபத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் இன்று (20.09.2025) நடைபெறவுள்ளது.

இந்த முகாம் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## தலைமைக் கழகப் பேச்சாளர்

# கோடையிடி குற்றாலம் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

மதுரை, செப். 20-

முகவை மாவட்ட நாடக நடிகர் சங்கத் தலைவரும், கமுதி, வேலாங்குளம் எஸ்.கே.ஆனந்தன், எஸ்.கே. இசையரசன் ஆகியோரின் தந்தையும், தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளருமான கோடையிடி குற்றாளம் நேற்று (19.09.2025-வெள்ளி) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து ஏராளமான கழகத்தினர் அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (20.09.2025 - சனிக்கிழமை) பகல் 12 மணியளவில் கமுதி, காமாட்சி அம்மன் கோவில் தெருவில் உள்ள அவரது இல்லத்திலி



ருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.